**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2022**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ("கூட்டுத்தாபனம்") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் அமைப்பானது (NEMO), 2021 ஏப்ரல் 27 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் அமைச்சரவைப் பத்திரம் இல. CMP/21/0631/306/037 மூலம் கூட்டுத்தாபனத்துடன் அதன் அலகாக இணைக்கப்பட்டது. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, 2வது வகை தவணை - பகுதி XLII இன் கீழ் 2022 ஆம் ஆண்டின் செயல்பாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிக்கை 2025 ஏப்ரல் 28 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது, மேலும், இந்த அறிக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை

பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பனவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள கணிசமான உருப்படிகளை மாற்று வழிகள் மூலம் உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ எனக்கு முடியாமல் இருந்தது. இவ்விடயங்களின் விளைவாக, பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத தொகைகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றினை தயாரிக்கும் கூறுகள் தொடர்பில் ஏதேனும் சீராக்கங்கள் அவசியமா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாமல் இருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான ஓர் கணக்காய்வு அடிப்படையினை வழங்க முடியாதுள்ளேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் இல 32 ஆம் பந்திக்கு முரணாக, 08 பேரேட்டு கணக்குகளின் வரவு மீதிகள் ரூபா 342.84 மில்லியன் தொகையான அச் செலவு மீதிகளுடன் ஈடுசெய்யப்பட்டிருந்தன. மேலும், மற்றுமொறு 08 பேரேட்டு கணக்குகளின் செலவு மீதிகள் கூட்டுமொத்தம் ரூபா 531.55 மில்லியன் தொகையான அவ் வரவு மீதிகளுடன் ஈடுசெய்யப்பட்டிருந்தன. இதனால், நிதிக் கூற்றுக்களின் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் முறையே அதே தொகைகளினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | குறைபாட்டிலுள்ள மாற்றுதல் பிழை மற்றும் சரியான விற்பனையாளரையோ அல்லது சரியான வழியையோ கண்டறியத் தவறியமை காரணமாக, அது செலுத்த வேண்டிய கணக்குகளில் வரவு மீதிகளாகவும் மற்றும் பெற வேண்டிய கணக்குகளில் செலவு மீதிகளாகவும் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. எனவே, திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கூட்டுத்தாபனம், SLFRS ஆல் தேவைப்படும் அல்லது அனுமதிக்கப்படும் பட்சத்திலன்றி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், அல்லது வருமானம் மற்றும் செலவினங்களை ஈடுசெய்வது கூடாது. இது அடுத்துவரும் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்திக்கு முரணாக, மீளாய்வாண்டின் இறுதியளவில் கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 400.68 மில்லியனாகக் காணப்பட்ட குறித்த சில நிலையான சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலத்தை கூட்டுத்தாபனம் மீளாய்வு செய்யத் தவறியிருந்தது. மேலும், மொத்தம் ரூபா 1,132.10 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் முழுமையாகத் தேய்வடையச் செய்யப்பட்ட பின்னரும் பாவனையில் இருந்தன. இருப்பினும், குறித்த நியமத்தின் பந்தி 79(ஆ) இன் கீழ் தேவைப்படுவதற்கு அமைய, மதிப்பீட்டுப் பிழையைத் திருத்துவதற்கு அல்லது முழுமையாகத் தேய்வடையச் செய்யப்பட்ட குறித்த சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லும் தொகையை வெளிப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இவ் விடயமானது தொழிநுட்ப ரீதியாக திறமையான மதிப்பீடு ஊடாக மீளாய்வு செய்ய SEC கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு மற்றும் அதன் உப குழு என்பனவற்றிற்கு கொண்டுவரப்பட்டது. மதிப்பீட்டு குழுவின் முடிவுகளுடன் தேவைகள் நிபர்த்திசெய்யப்படும். பந்தி 79(ஆ) வின் கீழான வெளிப்படுத்தல் தேவைப்பாட்டுடன் இணங்குவது 2023 இல் பூர்த்திசெய்யப்படும். | எஞ்சிய பெறுமதி மற்றும் ஒரு சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் என்பன குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டும், மேலும் முழுமையாகத் தேய்வடையச் செய்யப்பட்ட சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லும் தொகையை உரிய நியமங்களுக்கு அமைய வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் பெறுமதியில் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களுக்கும் நிலையான சொத்து பதிவேட்டிற்கும் இடையே ரூபா 2.08 மில்லியன் இனங்காணப்படாத வேறுபாடு காணப்படுகின்றது. | 2025 ஆம் ஆண்டில் சீராக்கல் செய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | நிலையான சொத்து பதிவேடு மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பன அவைகளை இணக்கம் செய்த பின் துல்லியமாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் பிரிவுகளிடையே பேணப்படும் நடைமுறைக் கணக்குகளின் மீதிகளானது மீளாய்வாண்டின் இறுதிக்குள் ஒன்றோடொன்று இணங்க வேண்டுமான போதிலும், நிதிக் கூற்றுக்களில் “உள்ளக நடைமுறைக் கணக்குகள்” என ரூபா 133.09 மில்லியன் வரவு மீதி ஏனைய பெறவேண்டியவையில் காணப்பட்டது. மேலும், கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் அமைப்பு (NEMO) ஆகியவற்றின் நிதிக் கூற்றுக்களில் உள்ள நடைமுறைக் கணக்கு நிலுவைக்கு இடையே ரூபா 194.44 | உள்ளக குழு நடைமுறைக் கணக்குகள் மற்றும் உள்ளக கம்பனி நடைமுறைக் கணக்குகள் என்பனவற்றின் கணக்கிணக்கமானது ஒன்றோடொன்று ஒத்துப்போவது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | பிரிவுகளிடையே உள்ள நடைமுறைக் கணக்கு நிலுவைகளிலும், கூட்டுத்தாபனம் மற்றும் NEMO என்பவற்றிற்கு இடையேயான நடைமுறைக் கணக்கு நிலுவைகளிலும் உள்ள வேறுபாடுகளை இணக்கம்செய்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. இருப்பினும், வேறுபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்வுக்கு வெளியிடப்படவில்லை. | | |
| (இ) | 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு NEMO வின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் இலாபக் கணிப்பீட்டு அட்டவணை என்பவற்றிற்கிடையே வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய மீதிகள் மற்றும் வாடிக்கையாளர்களிற்குச் செலுத்தவேண்டிய மீதிகள் என்பவற்றில் முறையே ரூபா 1,019.89 மில்லியன் மற்றும் ரூபா 582.63 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படும் வரை, ஐந்தொகை ஊடாக முன் கொண்டுவரப்பட்ட செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய மீதிகளானது சீராக்கப்பட்ட வருமானம் மற்றும் பூர்த்தியாக்கல் சதவீத முறையின் கீழ் சான்றுப்படுத்தப்பட்ட பட்டியல்கள் என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டின் பெறுபேறாகும். | சம்பந்தப்பட்ட அட்டவணைகளுடன் இணக்கப்படுத்திய பின் கணக்குகளைத் துல்லியமாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 0.87 மில்லியன் தொகையான சேமிப்பு கணக்கு மீதிகள் 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு மக்கள் வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும், 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் இம் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் உடன் அடுத்த வருடம் பூர்த்திசெய்யப்படுவதுடன் 2025 இல் கணக்குப் புத்தகங்களில் சீராக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் அனைத்து வங்கிக் கணக்குகளின் விபரங்களினையும் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | NEMO பிரிவின் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF அட்டவணைகள் மற்றும் அதன் மீதிகள் என்பனவற்றிற்கிடையே முறையே ரூபா 3.12 மில்லியன் மற்றும் ரூபா 3.27 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | விருப்பு ஓய்வூதியத்திட்டத்தின் பின்னர் பணியமர்த்துவதற்கு பொறுப்பான அல்லது தகுதியான உத்தியோகத்தர் இல்லாததன் காரணமாக NEMO வுடன் தொடர்புபட்ட செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF என்பன மாற்று நடவடிக்கை செயன்முறை ஊடாக மீள்பரிசீலனை செய்யப்படும். | சம்பந்தப்பட்ட அட்டவணைகளுடன் இணக்கப்படுத்திய பின் கணக்குகளைத் துல்லியமாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | உரிய வாடிக்கையாளர் யாரென்பதை அடையாளம் காணாமல், வைப்புக்கள், முற்கொடுப்பணவுகள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றின் கீழ் ‘‘வாடிக்கையாளர் பெறுவனவுகள்’’ என ரூபா 33.58 மில்லியனான செலவு மீதி காட்டப்பட்டுள்ளது. மேலும், ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் மீதித் திருத்தம் மற்றும் வழங்கப்பட்ட கடன் எனக்குறிப்பிட்டு ஓர் வங்கிப் பற்று மீதி ரூபா 14.60 மில்லியனும் வங்கிப் பரிமாற்றம் எனக்குறிப்பிட்டு செலவு மீதி ரூபா 8.72 மில்லியனும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | ஆலோசகரின் சான்றிதழுக்காக வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்பட்ட நேரடி கொடுப்பனவுகள், வாடிக்கையாளர் பெறுவனவு கணக்கு எனப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தனிப்பட்ட கணக்கில் பதிவிடப்பட்டிருந்தன என்பதோடு, பின்னர் பட்டியல்களைப் பதிவிடும்போதே அது சரிசெய்யப்பட்டது என இதற்கு விளக்கமளிக்கப்படலாம். | சம்பந்தப்பட்ட அட்டவணைகளுடன் இணக்கப்படுத்திய பின் கணக்குகளைத் துல்லியமாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தால் ஈட்டப்பட்ட தேரிய நட்டம் ரூபா 1,509.30 மில்லியன் ஆக இருந்ததுடன் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் நிறுத்திவைத்த வருவாய் (வரவு மீதி) ரூபா 9,123.41 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், அத்திகதியில் கூட்டுத்தாபனத்தின் நடைமுறைப் பொறுப்புக்களானவை, ரூபா 132.30 மில்லியன் வங்கி மேலதிகப்பற்று மற்றும் ரூபா 3,207.05 மில்லியன் வட்டிக் கடன்கள் உட்பட, நடைமுறைச் சொத்துக்களை விட ரூபா 5,463.13 மில்லியனால் அதிகரித்துக் காணப்பட்டன. கூட்டுத்தாபனம் எதிர்கொண்ட நிதி நெருக்கடிகள் காரணமாக, சம்பளம் வழங்குவதற்காக மீளாய்ண்டில் திறைசேரியினால் கூட்டு மொத்தம் ரூபா 465.90 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தேசியப் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக நட்டம் ஏற்படும் நிலைமை மேலும் தீவிரமடைந்தது. இச்சூழ்நிலையில், 2022 ஆம் ஆண்டில் அமைச்சரவைக்கு மறுசீரமைப்பு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டின் 4 ஆம் காலாண்டில் ஊழியர்களுக்கு விருப்பு ஓய்வுத் திட்டத்தை (VRS) வழங்குவதற்கான வேறெரு அனுமதியின் மூலம் அது புதுப்பிக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது. அத்துடன், தற்போதைய நிதிச் செலவீனத்தைக் குறைப்பதன் மூலம் நடப்புப் காசுப் பாய்ச்சலைச் சீராகப் பேணுவதற்கும், தற்சமயம் 5.5 பில்லியனுக்கும் அதிகமான பணித் தொகுப்பை அதிகரிக்கும் அதேவேளையில், உற்பத்தித் திறனற்ற நிலையான செலவுகளை நீக்குவதற்கும் காணி பரிமாற்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | ஓர் சுய நிதி நிறுவனமாக தந்திரோபாய ரீதியாக இலாபத்தினை அதிகரிக்க நிர்மான செயற்திட்டங்களின் செலவு மற்றும் நிதிச் செலவுகளை குறைக்க முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு ஆவணச்சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை (ரூபா.மில்லியன்) | சான்றுகளில்லாமை | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வைப்பு, முற்கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் | 786.06 | விரிவான அட்டவணைகள், காலப் பகுப்பாய்வு. | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்துத் தேவையான விவரங்களையும் உள்ளடக்கிய ஒரு விரிவான அட்டவணை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | நடைமுறைப் பொறுப்புகள் | 1,693.20 | விரிவான அட்டவணைகள், காலப் பகுப்பாய்வு. | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | மேற்கூறியவாறு. |
| (இ) | வங்கி மீதிகள் | 5.06 | வங்கி உறுதிப்படுத்தல், வங்கிக் கூற்று மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள். | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | வங்கி உறுதிப்படுத்தல், வங்கிக் கூற்று மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள் என்பன கணக்காய்வுக்காக சரியான முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வருமானம் | 412.99 | விரிவான அட்டவணைகள். | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்துத் தேவையான விவரங்களையும் உள்ளடக்கிய ஒரு விரிவான அட்டவணை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | வியாபார பெறவேண்டியவை (NEMO) | 231.09 | விரிவான அட்டவணைகள். | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | மேற்கூறியவாறு. |
| (ஊ) | வைப்பு, முற்கொடுப்பனவு மற்றும் முற்பணங்கள் | 1,068.45 | விரிவான அட்டவணைகள். | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | மேற்கூறியவாறு. |
| (எ) | நடைமுறைப் பொறுப்புகள் | 1,458.04 | விரிவான அட்டவணைகள், காலப் பகுப்பாய்வு. | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | மேற்கூறியவாறு. |
| (ஏ) | ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 372.88 | நிலையான சொத்துக்கள் பதிவேடு. | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துப் பதிவேடுகளின் உண்மைத்தன்மை மற்றும் பூரணத்துவத்தினை உறுதி செய்ய ஓர் முறையான அடிப்படையில் நிலையான சொத்துப் பதிவேடுகளானது பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஐ) | நடைமுறைச் சொத்து மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் ஆரம்ப மீதி | 411.90 | விரிவான அட்டவணைகள். | தொடர்புடைய கணக்கீட்டு பதிவுகளை பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்துத் தேவையான விவரங்களையும் உள்ளடக்கிய ஒரு விரிவான அட்டவணை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏழு குழுக்களுடன் தொடர்புடைய வியாபாரக் கடன்பட்டோர்கள் ரூபா 1,565.57 மில்லியன் ஆனது 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு 03 வருடங்களுக்கு மேலாக வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதுடன், இது நிதிக்கூற்றுக்களின் மொத்தக் கடன்பட்டோர் நிலுவை ரூபா 2,441.56 மில்லியனில் 64 சதவீதம் ஆகும். | 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுள்ளவாறான வியாபாரக் கடன் கொடுத்தோர்களின் மீதியானது, அதற்குப் பிந்திய காலத்தில் ரூபா 675 மில்லியன் வசூலிக்கப்பட்டதன் மூலம் மேலும் குறைக்கப்பட்டு ரூபா 1,766.66 மில்லியன் வரை வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. | பெறவேண்டியவற்றை உடனடியாக மீளப்பெற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | வைப்புகள், முற்கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் எனப் பல்வேறு வகைப்பாடுகளின் கீழ் ரூபா 1,013.45 மில்லியன் முற்பணங்கள் பதியப்பட்டுள்ளன. அவற்றில் திரட்டப்பட்ட மீதிகளில் ரூபா. 589.05 மில்லியன் மூன்று வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளது. | 2025 ஆம் ஆண்டிற்கான தற்போதைய முற்பண மூல ஆவணங்களுக்கு அமைவாகக் கணக்குகள் மீளாய்வு செய்யப்பட்டு கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளன. தீர்க்கப்பட்ட மீதிகள் உட்பட, 2026 ஆம் ஆண்டிற்கான கணக்கியல் முறைமையை இற்றைப்படுத்துகையில், காலப்பகுப்பாய்வு எல்லையை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாகத் திருத்தியமைக்குமாறு கோரப்பட்டுள்ளது. | இந் நிலுவைகளை உடனடியாகத் தீர்க்கவும், அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2009 ஆம் ஆண்டிலிருந்து U.D.A கள இல. 1575 இன் கீழ் ஏனைய பெறவேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த மிகுதி ரூபா 5.40 மில்லியனானது 2025 திசெம்பர் 31 வரை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை. | மாளிகாவத்தையிலுள்ள எரிபொருள் நிரப்புநிலைய வளாகத்திலிருந்து நுகே வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டமைக்கான செலவீன அதிகரிப்பானது, நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து மீளப் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுவதானது, உறுதிப்படுத்தல் செயல்முறை பூர்த்தியடைந்ததும் கணக்குகளில் சீராக்கப்படும். | பெறவேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு பெறவேண்டிய பிடிகாசு ரூபா 1,309.24 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும், இம் மீதியுடன் தொடர்புபட்ட விபரமான அட்டவணைகள் செயற்திட்ட அடிப்படையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன்படி, இம் மீதிகள் பூர்த்தி செய்யப்பட்ட | நடைமுறை பூர்த்தியாக்கல் / இறுதிக் கட்டத்திற்காக சான்றுப்பத்திரத்தினை வழங்கும் செயன்முறையின்போது பிடிகாசினை மீள அறவிடுவது தீர்மானிக்கப்பட்டு முடிவுசெய்யப்பட்டுள்ளது. | பெறவேண்டிய பிடிகாசு மீதிகளை உரிய நேரங்களில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களுடன் தொடர்புபட்டதா அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்திட்டங்களுடன் தொடர்புபட்டதா என உறுதிப்படுத்துவது சாத்தியமற்றதாக காணப்பட்டது. மேலும், ரூபா 682.71 மில்லியன் தொகையான பெறவேண்டிய பிடிகாசு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | செயற்பாடற்ற செயற்திட்டங்கள் மீது 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய மீதிகள் மற்றும் வாடிக்கையாளர்களிற்கு செலுத்த வேண்டிய மீதிகள் என்பன முறையே ரூபா 1,208.08 மில்லியன் மற்றும் ரூபா 507.31 மில்லியனாக காணப்பட்டது. இம் மீதிகள் உரிய செயற்திட்டங்களை பூர்த்திசெய்யும் அல்லது முடிவுறுத்தும் வரை காணப்பட்டது. | ஏற்றுக்கொண்டதுடன் இறுதியாக்கல் நடவடிக்கை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | செயற்பாடற்ற செயற்திட்டங்களை முடிவுறுத்தி உடனடியாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட இறுதிப் பட்டியல்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 1,859.23 மில்லியன் கொண்ட 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நடைமுறைப் பொறுப்புக்களும், ரூபா 10.56 மில்லியன் வருமான வரியும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. மேலும், ரூபா 57.69 மில்லியன் அட்டுறு செலவீனங்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளில், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு, மீளாய்வாண்டில் ரூபா 5.03 மில்லியன் மாத்திரமே அட்டுறு செலவீனமாக்கப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 52.66 மில்லியனானது மீளாய்வாண்டிற்கு முன்னரான அட்டுறு மீதியாவதுடன், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுள்ளவாறு செலுத்தப்படாமல் காணப்பட்டது. | தற்போதைய காசுப் பாய்ச்சல் மற்றும் நடைமுறைச் செயட்திட்டங்கள் மற்றும் பணிகளின் தொடர்ச்சித்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தற்போதைய தொழிற்பாட்டிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் நடைமுறைப் பொறுப்புக்களை மாத்திரம் தீர்ப்பதற்கும், ஏனையவற்றை முன்னுரிமை அடிப்படையில் காணி பரிமாற்றத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் போன்ற அசாதாரண செயல்முறைகளிலிருந்து வளங்கள் கண்டறியப்படும் வரை பிற்போடுவதற்கும் நிறுவன முகாமை கொள்கைத் தீர்மானத்தை எடுத்துள்ளது. | தாமதமின்றி நிலுவையில் உள்ள தொகைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த வேலை ஆரம்பிப்பு முற்பணம் ரூபா. 899.82 மில்லியன் ஆனது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தீர்க்கப்படாமல் 05 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் | SEC இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட, நீண்டகாலமாக காணப்பட்ட வேலை ஆரம்பிப்பு முன்பணங்கள் மீளப் பெறப்படாமைக்கு பின்வரும் காரணங்கள் வழிவகுத்துள்ளன: | நிலையான விலைமனுக்கோரல் ஆவணங்கள் / பெறுகை வழிகாட்டியின்படி வேலை ஆரம்பிப்பு முன்பணங்களை மேற்கொண்டு |

| | | |
|---|---|---|
| உள்ளது. மேலும் அதில், ரூபா 29.40 மில்லியனானது 90 சதவீதத்திற்கு மேல் பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்களுடன் தொடர்புபட்டது. | சரியான இடைநிறுத்தல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் வாடிக்கையாளர் செயற்திட்டங்களை இடைநிறுத்தியமை, நிதி ஒதுக்கீட்டுப் பற்றாக்குறை மற்றும் பணி ஆரம்பிக்கப்பட்ட பின்னரோ அல்லது பகுதியளவில் பூர்த்தியடைந்த பின்னரோ செயற்திட்டத்தின் நோக்கம் அல்லது நோக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக செயற்திட்டங்கள் பல ஆண்டுகள் நீடிக்கப்பட்டு இருந்தமை போன்றவையாகும். | தாமதமின்றித் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பொது முகாமையாளரால் 2020 திசெம்பர் 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட கட்டளைக் காசோலைகள் பற்றிய உள்ளகச் சுற்றறிக்கை இலக்கம் 2020/48 இன் 08 ஆம் பந்தி | 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு காசோலை மூலம் வழங்கப்பட்ட முற்பணங்கள் கூட்டு மொத்தம் ரூபா 979.05 மில்லியனானது தீர்க்கப்படாமல் காணப்பட்டதுடன், அதில் ரூபா 134.18 மில்லியன் 3 தொடக்கம் 5 வருடங்களாகவும் ரூபா 182.52 மில்லியன் 5 வருடங்களிற்கு மேலாகவும் நிலுவையாக காணப்பட்டது. | இந்த நீண்டகால நிலுவைகள் அனைத்தையும் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் தீர்ப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்படுகிறது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி இந்த முன்பணங்களைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 1979 திசெம்பர் 20 ஆம் திகதிய 122/1979 இலக்க விசேட காசு முற்பணங்கள் உள்ளக சுற்றறிக்கையின் பந்தி 4 | பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்களிற்காக விசேட காசு முற்பணங்கள் வழங்கும் போது, அம் முற்பணங்கள் 14 நாட்களிற்குள் தீர்க்கப்படல் வேண்டும். இருப்பினும், 01 வருடத்திற்கு மேலாக நிலுவையாகக் காணப்படும் ரூபா 10.62 மில்லியன் தொகையான விசேட காசு முற்பணங்கள் 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு தீர்க்கப்படாமல் காணப்பட்டது. | நீண்டகால நிலுவைத் தொகைகள் 2024 ஆம் ஆண்டில் உருவான போதிலும், கணக்காய்வு அறிக்கை வழங்கப்படும் திகதியின் போது அது ரூபா 5.51 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன் அறவீட்டு செயற்பாடுகள் தொடர்கின்றன. | மேற்கூறியபடி |

### 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கூட ரூபா | அமைச்சரவை அமைச்சர்களினால் 2025.06.17 | கூட்டுத்தாபனம் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | 1,423.33 மில்லியன் மொத்தப் பெறுமதி சேர் வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆம் திகதிய அமப/25/0921/814/043 இலக்கம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உத்தேச காணிபரிமாற்றல் செயற்பாடுகளிலிருந்து பெறப்படும் வருமானத்தினூடாக அனைத்து முன்னய VAT நிலுவைகளை கொடுத்து தீர்க்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், இது CGIR உறுப்பினராகப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உபகுழுவினால் மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | சேர் வரிச் சட்டத்தின் படி பெறுமதி சேர் வரியைச் செலுத்த வேண்டும். |
| (ஆ) | 2019 மற்றும் அதற்கு முன்னய ஆண்டுகளுடன் தொடர்புபட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்கள்த்திற்கு செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிப் பொறுப்பு ரூபா 65.21 மில்லியனை கொடுத்து தீர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | மேலே குறிப்பிட்டபடி சீரமைப்புச் செயல்முறையின்படி வரி அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மூலம் தீர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | கூட்டுத்தாபனம் வரிச் சட்டங்களுடன் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 1,509.88 மில்லியன் நட்டமொன்றாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,739.55 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 229.67 மில்லியன் ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனைக் கிரயம் மற்றும் நிர்வாகச் செலவுகள் குறைவடைந்தமையே இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருவாய் மற்றும் செலவின இனங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டில் வருமானமானது ரூபா 551.63 மில்லியனால் வீழ்ச்சியடைந்ததுடன், இது 17.62 சதவீதக் குறைவைக் காட்டுகின்றது. விற்பனைக் கிரயம் மற்றும் நிர்வாகச் செலவுகள் முறையே ரூபா 571.10 மில்லியன் மற்றும் ரூபா 55.91 மில்லியனால் குறைந்திருந்தன. மேலும், முன்னய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய நிதிச் செலவுகள் ரூபா 363.79 மில்லியனால் அதிகரித்ததுடன், இது 130.59 சதவீத அதிகரிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### 2.3 விகித பகுப்பாய்வு

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்காக நிறுவனம் எதிர்மறையான தேறிய இலாப வீகிதமாக முறையே 59 சதவீதம் மற்றும் 56 சதவீதத்தினை பதிவு செய்திருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் நடைமுறை விகிதமானது முன்னய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் 0.6:1 ஆகவே காணப்பட்டது, இது ஓர் நிலையான பலவீனமான குறுங்கால திரவத் தன்மை நிலைமையினை காட்டுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடங்கள், சிவில் பொறியியல் மற்றும் பிற பொறியியல் திட்டங்களை ஆய்வு செய்தல், திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல், ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவச் சேவைகளை வழங்குதல், ஆயத்த கலவை கொங்கிறீட், வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் மற்றும் முன் வலியுறுத்தப்பட்ட கொங்கிறீட் தயாரிப்புகள் போன்றவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்தல் ஆகியவையே கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களாகும். 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு அமுல்படுத்தப்பட்ட 93 நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிர்மாணச் செயற்திட்டங்களில், 14 செயற்திட்டங்கள் ரூபா 251.84 மில்லியன் நட்டத்தினை ஏற்படுத்தியுள்ளன, மேலும் அந்த செயற்திட்டங்களில் இருந்து 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று திரண்ட நட்டம் ரூபா 785.62 மில்லியன் ஆகும்.<br>மேலும், NEMO பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட திஸ்ஸ பிரிவிலுள்ள ரன்மினிதென்னவிலுள்ள பிரதான கால்வாயில் மிளாய்வாண்டில் ரூபா 3.29 மில்லியன் நட்டம் ஏற்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு மொத்த நட்டம் ரூபா 36.95 மில்லியனாகவிருந்தது. | 2022 ஆம் ஆண்டு முதல் பொதுவான விலை அதிகரிப்பு மற்றும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் ஆகிய தேசியப் பொருளாதார நெருக்கடிகள் நட்டங்களை அதிகரிப்பதற்கு வழிவகுத்தன. 2026 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கு முன்னர் பொருளாதார ரீதியாக செயற்திட்டச் செலவுகளை நிர்வகிக்கும் அதேவேளை, இறுதி கட்டத்திலுள்ள அனைத்து செயற்திட்டங்களையும் குறுகிய காலத்திற்குள் பூர்த்திசெய்வதற்கு முகாமையானது உத்தேசித்துள்ளது.<br>முடிவாக்கல் செயற்பாடுகள் கட்டத்தில் செயற்திட்ட பெறுபேறுகள் மேலும் ஆராயப்படும். | கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் நிதி நட்டங்களைக் குறைப்பதற்கும், திட்டமிடல் மற்றும் முறையான மேற்பார்வை மூலம் இலாபத்தை மேம்படுத்துவதற்கும் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | நிரந்தரமான தளங்கள் மற்றும் பட்டறைகளின் வேலைச் செயற்திறன் தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான வருமானம் செலவு விபரங்களை ஆய்வுசெய்த பின்னர், மீளாய்வாண்டின் போது பன்னிரெண்டு தளங்களிலிருந்து ரூபா 172.89 மில்லியன் மொத்த நட்டம் ஏற்பட்டிருந்தது, மேலும் ஐந்து தளங்கள் மாத்திரமே | 2024.04.01 திகதியிட்ட கணக்காய்வு ஐயவினா 2022/AQ/01/04 சமர்ப்பிக்கப்பட்ட போது, நிரந்தரத் தளங்களில் ஏற்பட்ட நட்டங்களுக்கான காரணம் தனித்தனியாக கலந்துரையாடப்பட்டது. மேலும், மறுசீரமைப்புச் செயல்முறை ஆரம்பிக்கப்படும் வரையிலான இடைமாற்றக் காலத்தில், முன்எதிர்பார்க்கை முறையை மீண்டும் | கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் நிதி நட்டங்களைக் குறைப்பதற்கும், சிறந்த வேலைச் செயலாற்றல் மூலம் இலாபத்தை மேம்படுத்துவதற்கும் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலாபங்களை வழங்கியிருந்தது. | நடைமுறைப்படுத்துவதற்கும், நிரந்தரத் தளங்களுக்கான முன்மொழிவுகளை மேம்படுத்துவதற்கும்/ அறிமுகப்படுத்துவதற்கும் தந்திரோபாய வணிகத் திட்டத்தின் மூலம் மேலதிக நடவடிக்கைகள் நிறுவப்பட்டுள்ளன. | |
| (இ) | 2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்பட்ட 138 செயற்திட்டங்களுக்காக ரூபா 6,973.28 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், ரூபா 5,694.28 மில்லியன் இற்கான விலைப்பட்டியல்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2022 இற்கு முன்னர் NEMO பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட 12 செயற்திட்டங்களிற்காக ரூபா 94.14 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது, ரூபா 65.22 மில்லியனிற்கு மாத்திரமே பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. இந் செயற்திட்டங்கள் செயற்படாமல் இருப்பதால், எஞ்சிய தொகை ரூபா 1,307.92 மில்லியன் ஐ கூட்டுத்தாபனம் மீட்டெடுக்க முடியாமல் போகும் ஆபத்து காணப்படுகின்றது. | நடைமுறைப் பூர்த்தியாக்கல் அல்லது இறுதிச் சான்றிதழ் வழங்கப்படும் போது அல்லது செயற்திட்ட பூர்த்தியாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது, அறவிடப்படாத தொகைகள் மாற்றமடையும். மீளாய்வாண்டில் செயற்திட்ட வருமானமானது இடைக்கால பத்திரங்கள் / பட்டியல்கள் மூலமே அங்கீகரிக்கப்பட்டது. நடைமுறைப் பூர்த்திச்சான்றிதழ் அல்லது இறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டவுடன், மேலும் வருமானம் சேர்க்கப்படலாம், இது நட்டத்தை குறைப்பதற்கோ அல்லது இலாபத்தை அதிகரிப்பதற்கோ வழிவகுக்கும். | இந்த நிலைமையை உடனடியாகத் தீர்ப்பதற்கும், நிலுவைத் தொகையை மீளப்பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான இலாபக் கணிப்பீட்டுக் கூற்றில் சேர்க்கப்படாததும், எவ்விதச் செலவீனங்களும் மேற்கொள்ளப்படாததுமான (அதாவது நடைமுறைப்படுத்தப்படாத) செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 21.43 மில்லியன் பெறுமதியான மூலப்பொருள் இருப்பு மீதிகள் கணக்குகளில் தொடர்ந்தும் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இருப்பினும், இம்மூலப்பொருட்கள் ஏனைய செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கவோ அல்லது பரிமாற்றப்பட்டிருக்கவோ இல்லை. | கருத்துரைக்கவில்லை. | தேவைக்கேற்ப மூலப் பொருட்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பயன்படுத்தப்படாத மிகுதி இருப்பு காணப்படின் மற்றய செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இலுள்ளவாறு அலகு விலைகள் இல்லாததன் | அனைத்து உருப்படிகளிற்கும் விலையிடுவதற்கான உடனடி | இருப்புக்களை பெறுமதியிட்டு அடுத்துவரும் நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக 256 எண்ணிக்கையான இருப்பு உருப்படிகள் பெறுமதியிடப்பட்டு நிதிக் கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பது குறித்து குழுமம் மற்றும் பிரிவுத் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் முடிவுகள் கணக்காய்வளர்களிற்கு அறிவிக்கப்படும். | கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | யாழ்ப்பாணம் (வெள்ளாவெளி) செயற்திட்டத்தில் முன்மொழியப்பட்ட நடைபாதை மற்றும் நிலப்பரப்புப் பணிகளுக்கான திரண்ட செலவீனம் 2022 ஜனவரி 01 இலுள்ளவாறு ரூபா 3.55 மில்லியனாகக் காணப்பட்டது. இருப்பினும், இத்தொகையானது ரூபா 3.33 மில்லியனால் குறைக்கப்பட்டதுடன், 2022 டிசம்பர் 31 இலுள்ளவாறு இச்செயற்திட்டத்தின் திரண்ட செலவீனம் ரூபா 0.22 மில்லியனாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், 2022 ஆண்டிற்கான இலாபக் கணிப்பீட்டின்படி ரூபா 6.39 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முரண்பாட்டினைச் சுட்டிக்காட்டுகின்றது. | NEMO செயற்திட்டங்களின் செலவுப் பகிர்வு / பங்கீடு செயற்திட்ட முடிவுறுத்தலின் விசேட நடவடிக்கையூடாக மேலும் ஆராயப்படல் வேண்டும். | செயற்திட்ட விபரங்களை சரியாக பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றறிக்கையின் பந்தி 6.6 இன் படி, ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டு அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2025 நவம்பர் 14 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | அந்தந்தச் சட்டப்பூர்வத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் முந்தைய ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்களை விரைவாகச் சமர்ப்பிப்பதற்கும் தற்போதைய அறிக்கையைப் புதுப்பிப்பதற்கும் ஆர்வமாக உள்ளன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டு அறிக்கையினை சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |